**OS.NO. 25/2021 PW-1**

நாள் : 22.02.2023

பெயர்: மகேந்திரன்

த/பெ : சிவலிங்கம்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

1. நீங்கள் தாவா சொத்தை அனுபவித்து இருப்பதற்கு ஆதாரமாக அடங்கல், குடிநீர்வரி ரசீது முதலிய ஆவணங்களை வழக்கு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம். நீங்கள் சொல்வது தவறு, தாவா சொத்து உங்கள் சுவாதீனத்தில் இருப்பதற்கு ஆதரவாக நீங்கள் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள வழக்கில் வீட்டின் விவரத்தை குறிப்பிட்டு சொல்லி உள்ளீர்கள் என்றால் இல்லை, நான் இடத்திற்கு மட்டும் உரிமை கோரியுள்ளேன். நீங்கள் தாவா சொத்தில் வீடு கட்டியதற்கான செலவு ரசீதுகள் மற்றும் கட்டுமான பணிகளுக்கான ரசீதுகளை வழக்கு ஆவணங்களாக முன்னிலைப்படுத்தவில்லை என்று சொன்னால் நான் என்னுடைய சகோதரிகளிடம் வீடு கட்டும் சமயத்தில் தவணைகளாக நான் பணத்தை கொடுத்துள்ளேன்.

2. நீங்கள் சொல்வது தவறு அவ்வாறு உங்கள் சகோதரிகளிடம் பணம் கொடுத்ததற்கான ஆவணங்கள் எதையும் நீங்கள் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் சாட்சியம் அளித்துள்ள வீடு கட்டும் செலவினத்திற்கு உங்கள் சகோதரிகளிடம் பணம் கொடுத்ததற்கான விவரத்தை உங்களுடைய வாதுரையில் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நீங்கள் வழக்கு சொத்தில் கோரிய நிவாரணம் தவறு நீங்கள் அடிமனைக்கு மட்டும் தான் உங்களுக்கு ஒரு பாகம் கிடைக்க தகுதியானவர் தாவா சொத்தில் உள்ள வீட்டினை உங்கள் சகோதரிகள் அனைவரும் சேர்ந்து தான் கட்டினார்கள் அதனால் அடிமனை மற்றும் வீட்டிற்கு நீங்கள் கோரியுள்ள பாகம் தவறு என்று சொன்னால் சரியல்ல. வீட்டினை நான் தான் கட்டினேன். அதனால் எனக்கு மட்டும் தான் அதில் உரிமை உள்ளது. நீங்கள் சொல்வது தவறு

வீடு மற்றும் இடத்தை சேர்த்து தான் உங்களுக்கு ஒரு பாகம் கிடைப்பதற்கு தகுதி உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

**Sd/- D.Naveen Durai Babu,**
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.